# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No. 920/2025

Deposition of Witness for L.W.1 / P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமலி | | | |
| Husband's Name | : | பவுல்ராஜ் | Occupation | : | செவிலியர் |
| Village | : | சாஸ்திரி நகர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.01.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு சாஸ்திரி நகரில் குடியிருந்துக்கொண்டு, தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது கணவர் ஆவார். நானும், எனது கணவரும் 2019 ஆம் வருடம் Be Well மருத்துவமனையில் ஒன்றாக பணிபுரிந்து வந்தோம். அப்போது எனது கணவர் என்னை காதலிப்பதாக கூறினார். நான் முதலில் அவரது காதலை ஏற்க மறுத்து வந்தேன்.

2. பின்னர் நானும், அவரை காதலித்தேன். நான் எனது காதல் விவரத்தை எனது வீட்டில் கூறிய போது. முதலில் எனது பெற்றோர் மறுத்துவிட்டனர். பின்னர் அவர்களிடம் பேசி, எனது கணவர் எனது பெற்றோருக்கு புரிய வைத்தார். பின்னர் எனது பெற்றோர் எங்களது காதலை ஏற்றுக் கொண்டனர். எனது கணவர் அவரது வீட்டிலும் முதலில் எங்களது காதலுக்கு Ok சொல்லி விட்டதாக கூறினார். எனது வீட்டில் எங்களது திருமணத்திற்கு அழுத்தம் கொடுத்தனர். அப்போது எனது கணவர், அவரது வீட்டில் திருமணத்திற்கு பிறகு சொல்லி

அவரது பெற்றோரை சமாதானம் செய்து கொள்ளலாம் என்று கூறினார். அதன் அடிப்படையில் எனது பெற்றோர் எங்கள் இருவருக்கும் மூன்று முறை திருமண நிச்சயதார்த்த ஏற்பாடுகளை செய்தார்கள். முதல் முறை திருமண நிச்சயதார்த்த ஏற்பாடுகளை எனது வீட்டில் செய்த போது, எனது கணவர் தன்னை அவரது வீட்டில் அடைத்து வைத்து கொடுமை செய்ததாக கூறினார். அதனால் முதல் முறை ஏற்பாடு செய்யப்பட்ட திருமண நிச்சயதார்த்தம் தடைபட்டது. பின்னர் 2022 ஆம் வருடம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி, திருமண நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்றும், இந்த முறை நிச்சயதார்த்தம் கண்டிப்பாக தடைபடாது என்றும், பவுல்ராஜ் நேரில் எனது வீட்டிற்கு வந்து, எனது பெற்றோருடன் கூறினார்.

3. பவுல்ராஜின் அண்ணனும் மேற்படி விஷயத்தை போன் மூலம் உறுதி செய்தார். ஆனால், இரண்டாவது முறை ஏற்பாடு செய்த திருமணம் நிச்சயதார்த்தத்திற்கும், எனது கணவர் வரவில்லை. அவரிடம் கேட்ட பொழுது அவரது வீட்டில் மிகவும் அழுத்தம் கொடுத்ததாகவும், அதனால் தன்னால் வர இயலவில்லை என்றும், கூறினார். அதனால் எனது வீட்டில் எனக்கு வேறு பக்கம் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கும் விஷயத்தை நான் பவுல்ராஜிடம் கூறினேன். நீங்கள் ஒன்று என்னை திருமணம் செய்து கொள்ளுங்கள், அல்லது என்னை விட்டு விடுங்கள் என்று கூறினேன். அதற்கு பவுல்ராஜும், அவரது அண்ணனும், எனது வீட்டிற்கு வந்து எனது அம்மாவின் காலில் விழுந்து நான் பவுல்ராஜிற்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

4. அதனால், எனது பெற்றோர்கள் மூன்றாவது முறையாக எங்களது திருமண நிச்சயதார்த்தத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அன்றைய தினமும் பவுல்ராஜ் நிச்சயதார்த்தத்திற்கு வரவில்லை. அதைப்பற்றி பவுல்ராஜிடம் கேட்ட பொழுது, எனது வீட்டு ஆட்கள், அவர் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்ததாக

கூறினார். ஆனால் எனது வீட்டு ஆட்கள் யாரும் அங்கு சென்று பிரச்சனை செய்யவில்லை. தொடர்ந்து போன் மூலம் தொந்தரவு செய்து கொண்டே இருந்தார். பிறகு எனது வீட்டிற்கு நேரிலும் வந்தார். இந்த முறை எனது பெற்றோர் எங்களது திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. நான் எனது பெற்றோரை மீறி பௌல்ராஜை திருமணம் செய்து கொள்வதற்காக எங்கள் வீட்டில் இருந்து அம்மாபேட்டை பூதப்பாடியில் உள்ள மாதா தேவாலயத்திற்கு சென்றோம். என்னை, எனது வீட்டிற்கு வந்து பாவுல்ராஜ் கூட்டி சென்றார். தேவாலயத்தில் திருமணம் செய்து கொண்டு, நாங்கள் இருவரும் ஈரோடு சாஸ்திரி நகரில் குடியிருந்து வந்தோம். அப்போது நான் கருவுற்றிருந்தேன்.

5. இந்த நிலையில் ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து, என் மீதும், என் கணவர் பௌல்ராஜ் என்பவர் மீதும் ஜெனிபர் என்பவர் புகார் அளித்துள்ளதாகவும், அது தொடர்பாக விசாரணைக்கு வருமாறும், கூறினார்கள். அதன்படி நானும், எனது கணவர் பௌல்ராஜும் ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு சென்ற பிறகுதான் பவுல்ராஜிற்கு ஏற்கனவே திருமணம் ஆகியுள்ளது என்றும், அவர் புகார் அளித்த ஜெனிபரைதான் திருமணம் செய்துள்ளார் என்றும், எனக்கு தெரியவந்தது. பின்னர் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். அந்த விசாரணையில் நான் பவுல்ராஜுடன் வாழ்வதற்கு எனக்கு விருப்பமில்லை என்று கூறிவிட்டு வந்து விட்டேன். பிறகு நான் தனியாகத்தான் சாஸ்திரி நகரில் உள்ள வீட்டில் வசித்து வந்தேன். அப்போது ஒரு நாள் அக்டோபர் மாதம், 2024 ஆம் வருடம், 14ஆம் தேதி அன்று, எனது வீட்டிற்கு வந்த பவுல்ராஜ், என்னிடம் நீ கருக்கலைப்பு செய்துவிட்டு இங்கிருந்து வேறு ஊருக்கு சென்று விடு என்றும், இல்லாவிட்டால் பெட்ரோல் ஊற்றி கொளுத்தி கொன்று விடுவேன் என்றும், மிரட்டினார்.

6. நான் கருவுற்றிருந்த நிலையிலும், அவர் என்னை கீழே தள்ளிவிட்டு, தகாத வார்த்தைகளால், அசிங்க அசிங்கமாக திட்டினார். சத்தம் கேட்டு பக்கத்தில் உள்ளவர்கள் வந்தவுடன் பவுல்ராஜ் அங்கிருந்து கிளம்பிவிட்டார். பின்னர் 17.10.2024 ஆம் தேதி அன்று, நான் ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். விசாரணைக்காக காவல் நிலையத்தார் எனது கணவரை காவல் நிலையத்திற்கு அழைத்த போது, அவர் 2-3 முறை வரவில்லை. பிறகு விசாரணைக்கு வந்த எனது கணவர் எனக்கும், அவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், நான் யார் என்று அவருக்கு தெரியாது என்றும், கூறிவிட்டார். பிறகு போலீசார் இந்த வழக்கை பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்குத்தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**
**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No. 920/2025
Deposition of Witness for L.W.2 / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜோசப் லிங்கன் | | | |
| Father's Name | : | பிச்சைமுத்து | Occupation | : | விவசாயம் |
| Village | : | திருவெண்ணைநல்லூர், மாத்ம்பட்டி, | | | |
| District | : | விழுப்புரம் | Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.01.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

1. நான் விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் தாலுகா, மாதம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரி எனது மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டவர் ஆவார். எனது மகள் ஈரோட்டில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து கொண்டிருந்தார். அப்போது ஆதர் எதியுடன் பழக்கம் ஏற்பட்டு. அவரை காதலிப்பதாகவும். அவரை திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும், என்னிடம் கூறினார். நான் முதலில் இவ்வளவு தூரம் எல்லாம் வேண்டாம் என்றும், கூறி மறுத்து வந்தேன். எனது மகள் தொடர்ந்து கூறி வந்ததால், நான் அவர்களது காதலை ஒத்துக் கொண்டேன்.

2. நான் எனது மகளை முறைப்படி பெண் கேட்க வருமாறு கூறினேன். அப்போது ஆஜர் எதிரி தன்னுடன் அண்ணன் மற்றும் நண்பர்கள் என கூறிக்கொண்டு, ஐந்து பேரை அழைத்துக் கொண்டு, எனது வீட்டிற்கு, எனது மகளை பெண் கேட்டு வந்தார். அவரிடம் அவரது அம்மா, அப்பா, எங்கே என்று கேட்டேன். அதற்கு அவர் அடுத்த முறை வரும்பொழுது தனது அப்பா, அம்மாவை அழைத்து வருவதாக குறி சென்றார்

மூன்று மாத காலம் ஆதர் எதிரி வரவே இல்லை மூன்று மாதம் கழித்து அவர் மட்டும் வந்தார் அவரிடம் உங்கள் அப்பா அம்மா எங்கே என்று கேட்டேன் அதற்கு அவர் அப்பா அம்மா எங்களது காதலை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தற்போது நிச்சயதார்த்தம் செய்து கொள்ளலாம் என்றும் திருமணத்திற்கு பிறகு அவர்களை சமாதானம் செய்து கொள்ளலாம் என்றும் கூறினார்.

3. அன்றைய தினமே ஆதர் எதிரி திருமண நிச்சயதார்த்தத்திற்கு தேதி குறித்து சென்றார். அந்த தேதியில் நாங்கள் எங்களது ஊரில் திருமண நிச்சயதார்த்த ஏற்பாடுகள் செய்தோம். ஆனால் திருமண நிச்சயதார்த்தத்திற்கு எதிரி வரவில்லை. மறுநாள் காலையில் எதிரியிடம் போன் செய்து கேட்டபோது, அவர் தனக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், அதனால் வரவில்லை என்றும், கூறினார்.

4. இது போலவே மூன்று முறை எங்களிடம் வந்து திருமண நிச்சயத்திற்கு நாள் குறித்து, திருமண ஏற்பாடுகள் செய்யுமாறு கூறினார். ஒவ்வொரு முறையும் எங்களிடம் மன்னிப்பு கேட்டு திருமண நிச்சயதார்த்தத்திற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கூறினார். நாங்களும், அதேபோல் செய்தோம். ஆனால் மூன்று முறையும் எதிரி திருமண நிச்சயதார்த்தத்திற்கு வரவில்லை. அதனால் நிச்சயதார்த்தம் தடைபட்டது. அதனால் நான் எனது பெண்ணிற்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க தொடங்கினேன்.

5. நான் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கும் விபரத்தை எனது மகள் எதிரிக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். அதன் பிறகு எதிரி நான் இல்லாத ஒரு சமயத்தில் எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் மன்னிப்பு கேட்டு, இந்த முறை கண்டிப்பாக எனது மகளை திருமணம் செய்து கொள்வதாக கூறினார். ஆனால் எனது மனைவி அதற்கு மறுத்துவிட்டார். இந்த நிலையில் வீட்டில் நாங்கள் அனைவரும் ஒரு நாள் சர்ச்சுக்கு சென்று விட்டோம். அப்போது எனது மகள் எங்களுக்கு தெரியாமல் ஆஜர் எதிரியுடன் இங்கு அம்மாபேட்டை வந்து, திருமணம் செய்து கொண்டார். நாங்கள் எங்கள் ஊர் திருவெண்ணெய்நல்லூரில் உள்ள காவல் நிலையத்தில் எனது மகளை காணவில்லை என புகார் அளித்தோம்.

6. அந்த புகாரின் அடிப்படையில் திருவெண்ணைநல்லூர் காவல் நிலையத்தார், இங்கு வந்து விசாரித்து எனது மகளையும் ஆஜர் எதிரியையும் கண்டுபிடித்து காவல்

திருவெண்ணைநல்லூர் காவல் நிலையம் அழைத்து வந்து, விசாரணை செய்தார்கள். அப்போது எதிரி எனது மகளை திருமணம் செய்து கொண்டதாகவும், அவருடன் தான் வாழப்போவதாகவும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டு மகளை அழைத்துக் கொண்டு ஈரோடு வந்துவிட்டார் பிறகு ஒரு மூன்று மாதம் கழித்து நான் எனது மகளை பார்ப்பதற்காக ஈரோடு வந்தேன். ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து எனது மகளுக்கு போன் செய்து, எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எனது மகள் ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருப்பதாகவும், பவுல்ராஜிற்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டதாகவும், அந்த பெண் புகார் அளித்துள்ளதால் காவல் நிலையத்தில் தங்களை விசாரணைக்கு அலைத்துள்ளதாகவும், கூறினார். அதன் பிறகுதான் எதிரிக்கு ஏற்கனவே இரண்டாவது திருமணம் ஆகி உள்ள விபரம் எங்களுக்கு தெரியவந்தது. அன்று முதல் பிரச்சினையாக தான் இருந்து வந்தது.

7. எனது மகள் அந்த சமயத்தில் கருவுற்று இருந்தார். எதிரி தனக்கும், அதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனக் கூறி, எனது மகளுடன் பிரச்சனை செய்து வந்தார். குழந்தை பிறந்த பிறகு குழந்தைக்கு பெயர் வைப்பதற்கு கூட அவர் வரவில்லை. அதில் ஏற்பட்ட தகராறுக்காக எனது மகள் இந்த புகார் மனுவை அளித்துள்ளார். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**
**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.